## 1. பழப்பயிர்களுக்கான உர அட்டவணை

**மா**

உரங்களை செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் இடவேண்டும். உரங்களை நன்கு கலந்த பின் செடிகளின் வயதிற்கேற்ப செடிகளின் அடிப்பாகத்திலிருந்து 45 முதல் 90 செ.மீ தூரத்தில் இட்டு, பின் அவற்றை மூடி நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

| **எரு மற்றும் உரங்கள் (கிலோ ஒரு மரத்திற்கு)** | **முதலாம் ஆண்டு (கிலோ ஒரு மரத்திற்கு)** | **வருடா வருடம் அதிகரிப்பு (கிலோ ஒரு மரத்திற்கு)** | **6 வருடங்களுக்கு பிறகு (கிலோ ஒரு மரத்திற்கு)** |
|---|---|---|---|
| தொழு உரம் | 10.00 | 10.00 | 50.00 |
| தழை | 0.20 | 0.20 | 1.00 |
| மணி | 0.20 | 0.20 | 1.00 |
| சாம்பல் | 0.30 | 0.30 | 1.50 |

**வாழை**

தோட்டக்கால், நஞ்சைப் பகுதி மற்றும் மலை வாழைக்கான பொது உரப் பரிந்துரை.

| **இரகம்** | **இடவேண்டிய சத்துக்கள் (கிராம் / ஒரு வருடத்திற்கு )** | | |
|---|---|---|---|
| | **தழை** | **மணி** | **சாம்பல்** |
| தோட்டக்கால் நேந்திரன் தவிர மற்ற இரகங்கள் | 110* | 35* | 330* |
| நேந்திரன் | 150 | 90 | 300 |
| நஞ்சைப் பகுதிகளுக்கு | 210 | 35 | 450 |
| நேந்திரன் | 210 | 50 | 390 |
| ரஸ்தாளி, பூவன், ரோபஸ்டா | 160 | 50 | 390 |

* திசு வளர்ப்பு வாழைகளுக்கு நடவு செய்த 2, 4, 6 மற்றும் 8 மாதங்களுக்கு பின்னர் 50 சதவிகிதம் உரத்தை அதிகமாக இட வேண்டும்.

மலை வாழை

அரை வட்ட வடிவ பாத்தியை மரத்திற்குக் கீழே அதாவது மரத்தைச் சுற்றி அமைக்கவும். அதில் 315 கிராம் (40:30:40) தழை, மணி, சாம்பல் சத்தைக் கலந்து இடவும். பின் 130 கிராம் மியூரோட் சாம்பல் சத்தை அக்டோபர் மாதத்தில் மற்றும் ஜனவரி, ஏப்ரல் மாதத்திலும் இடவும் அசோஸ்பைரில்லம் அல்லது பாஸ்போ பாக்டீரியா உயிர் உரத்ததை 20 கி / மரம் என்ற அளவிற்கு 2-வது மற்றும் 4வது மாதத்தில் எல்லா இரகத்திற்கும் இடவும்.

**எலுமிச்சை**

தழைச்சத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்து மார்ச் மற்றும் அக்டோபர் மாதங்களில் இடவேண்டும். தொழு உரம் மற்றும் மணி, சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய உரங்களை அக்டோபர் மாதங்களில் இடவேண்டும். 0.5 சதவிகிதம் ( 500 கிராம் / 100 லிட்டர் தண்ணீர்) துத்தநாக சல்பேட்டை புதிய இலைகள் தோன்றியவுடன் ஆண்டிற்று மூன்று முறை மார்ச், ஜீலை மற்றும் அக்டோபர் மாதங்களில் இடவேண்டும்.

| **உரத்தின் பெயர் (கிலோ / வருடம்)** | **முதல் வருடம்** | **வருடா வருடம் அதிகரிப்பு** | **6 வருடங்களுக்குப் பிறகு** |
|---|---|---|---|
| தொழு உரம் | 10.000 | 5.000 | 30.000 |
| நைட்ரஜன் | 0.200 | 0.100 | 0.600 |
| பாஸ்பேட் உரம் | 0.100 | 0.025 | 0.200 |
| பொட்டாஷ் | 0.100 | 0.040 | 0.300 |

**சாத்துக்குடி**

தழைச்சத்து கொடுக்கக்கூடிய உரங்களை இரண்டாகப் பிரித்து மாாச் மாதத்திலும், அக்டோபர் மாதத்திலும் இடவேண்டும். தொழு உரம், மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய உரங்களை அக்டோபர் மாதத்தில் இடவேண்டும்.

| எரு மற்றும் உரங்கள் | முதலாம் ஆண்டு (கிலோ ஒரு மரத்திற்கு) | வருடா வருடம் அதிகரிப்பு (கிலோ ஒரு மரத்திற்கு) | 6 வருடங்களுக்குப் பிறகு (கிலோ ஒரு மரத்திற்கு) |
|---|---|---|---|
| தொழு உரம் | 10.00 | 5.00 | 30.00 |
| தழை | 0.20 | 0.10 | 0.60 |
| மணி | 0.10 | 0.25 | 0.20 |
| சாம்பல் | 0.10 | 0.04 | 0.30 |

உரம் மற்றும் எரு வினை வட்டப்பாதத்தி முறை மூலம் தண்டுப் பகுதியிலிருந்து 70 செ.மீ தூரத்தில் இடவேண்டும். மரங்கள் புதிய தளிர்விடும் சமயத்தில் கீழ்க்கண்ட நுண்ஊட்டகங்களின் கலவையயை மரங்களின் மீது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தெளிக்கவேண்டும். சிங்க் சல்பேட் 0.5 சதவிகிதம், மாங்கனீசிய சல்பேட் 0.5 சதவிகிதம் போரான் 0.1 சதவிகிதம் மற்றும் மாலிப்டினம் 0.003 சதவிகிதம், இதைத் தவிர மரம் ஒன்றுக்கு 50 கிராம் சிங்க் சல்பேட், மாங்கனீசு, இரும்பு சத்தை வருடத்திற்கு ஒரு முறை அளித்தால் ஆரஞ்சு மரங்கள் நல்லபலன் கொடுக்கும்.

**ஆரஞ்சு**

அ) பழனிமலைப் பகுதிகளுக்கு

| வருடம் | தொழு உரம் | இடவேண்டிய சத்துக்கள் (கிலோ / ஒரு மரத்திற்கு) | | |
|---|---|---|---|---|
| | | தழை | மணி | சாம்பல் |
| முதல் வருடம் | 10.00 | 0.10 | 0.04 | 0.05 |
| இரண்டாம் வருடம் | 15.00 | 0.20 | 0.08 | 0.10 |
| மூன்றாம் வருடம் | 20.00 | 0.30 | 0.12 | 0.20 |
| நான்காம் வருடம் | 25.00 | 0.40 | 0.16 | 0.30 |
| ஐந்தாம் வருடம் | 25.00 | 0.40 | 0.16 | 0.30 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆறு வருடங்களுக்குப் பிறகு | 30.00 | 0.60 | 0.20 | 0.40 |

ஆ) சேர்வராயன் மலைப்பகுதிகளுக்கு

6 வயதான மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு 700 கிராம் தழைச்சத்து, 375 கிராம் மணிச்சத்து, 600 கிராம் சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய இராசயன உரங்களை ஒரு கிலோ விஏஎம் உடன் அளிக்கவேண்டும். பின்பு நீர்ப்பாய்ச்சவேண்டும். மலைப் பிரதேசத்தில் உரங்களை மண்ணில் இட்டு மூடிவிடவேண்டும்.

நூண்ணூட்டச் சத்து இடுதல்: ஆரஞ்சு வகைகளுக்கு முக்கிய ஊட்டச் சத்துக்களுடன் நுண் ஊட்டகங்களின் தேவையும் அதிகம். மரங்கள் புதிய தளிர்விடும் சமயத்தில் கீழ்க்கண்ட நுண்ஊட்டகங்களின் கலவையயை மரங்களின் மீது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தெளிக்கவேண்டும். சிங்க் சல்பேட் 0.5 சதவிகிதம், மாங்கனீசிய சல்பேட் 0.5 சதவிகிதம் போரான் 0.1 சதவிகிதம் மற்றும் மாலிப்டினம் 0.003 சதவிகிதம், இதைத் தவிர மரம் ஒன்றுக்கு 50 கிராம் சிங்க் சல்பேட், மாங்கனீசு, இரும்பு சத்தை வருடத்திற்கு ஒரு முறை அளித்தால் ஆரஞ்சு மரங்கள் நல்லபலன் கொடுக்கும்.

வருடத்திற்கு 2 அல்லது மூன்று முறை ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் சுண்ணாம்பை மரம் ஒன்றுக்கு நான்கு கிலோ அளிக்கவேண்டும். அதை உரங்களுடன் கலந்த அளிக்கக்கூடாது.

**திராட்சை**

| **இரகங்கள்** | **தொழு உரம்** | | | **பசுந்தழை உரம்** | | | **தழைச்சத்து** | | | **மணிச்சத்து** | | | **சாம்பல்சத்து** | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **(கிலோ / கொடிகளுக்கு)** | | | | | | **(கிராம் / கொடிகளுக்கு)** | | | | | | | | |
| | I | II | III | I | II | III | I | II | III | I | II | III | I | II | III |
| பன்னீர் | 50 | 50 | 100 | 50 | 50 | 100 | 10 | 20 | 20 | 08 | 16 | 16 | 30 | 40 | 60 |
| பச்சை திராட்சை மற்றும் | 50 | 50 | 100 | 50 | 50 | 100 | 20 | 30 | 40 | 08 | 16 | 24 | 40 | 80 | 20 |

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விதையில்லா தாம்சன் | | | | | | | | | | | | | | | |
| அனாப்-இ சாகி, சோனாகா, மாணிக்சமான் மற்றும் விதையில்லா சரத் | 50 | 50 | 100 | 50 | 50 | 100 | 20 | 40 | 60 | 08 | 16 | 24 | 40 | 80 | 20 |

உரத்தினை இரண்டாகப் பிரித்து கவாத்து செய்தவுடன் இடவேண்டும். சாம்பல் சத்தை இரண்டாகப் பிரித்து கவாத்து செய்தவுடன் ஒரு முறையும், பின்பு 60வது நாளிலும் இடவேண்டும்.

ஊட்டச்சத்து பற்றாக்குறையினைத் தடுக்க பூப்பதற்கு முன்னரும் முதல் தெளிப்பின் பின் 10 நாட்கள் இடைவெளியிலும் 0.1 சதவிகிதம் போரிக் அமிலம் + 0.2 சதவிகிதம் துத்தநாக சல்பேட் + 0.1 சதவிகிதம் யூரியா கலவையினைத் தெளிக்கவேண்டும்.

**கொய்யா**

மார்ச் மற்றும் அக்டோபர் மாதங்களில் ஒரு மரத்திற்கு தொழு உரம் 50 கிலோ, ஒரு கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இரண்டாகப் பிரித்து இடவேண்டும். கொய்யாவில் மகசூலை மேம்படுத்த, யூரியா 1 சதவிகிதம் மற்றும் துத்தநாக சல்பேட் 0.5 சதவிகிதம் இரண்டும் கலந்து கலவையை மார்ச் மற்றும் அக்டோபர் மாதங்களில், மரங்களின் மேல் இலைவழி உணவாகத் தெளிக்கவேண்டும்.

போரான் சத்து குறைபாடு இருந்தால், பழங்கள் சில நேரங்களில் வெடித்து காணப்படும். கடினமாகவும் இருக்கும். இலைகள் சிறுத்துக் காணப்படும். இக்குறைபாட்டைத் தவிர்க்க, 0.3 சதவிகிதம் போராக்ஸ் தெளிக்கவேண்டும். (1 லிட்டர் தண்ணீரில் 3 கிராம் போராக்ஸ் மருந்தைக் கரைக்கவேண்டும்).

நுண்ணூட்டச் சத்துக்குறைபாடு நிவர்த்தி

நூண்ணோட்டச் சத்துக் குறைபாட்டினால், இலைகள் சிறுத்தல், கணுக்களிடையே இடைவெளி குறைந்து செடிகள் குத்துச்செடிகள் போல தோற்றம் தருதல், இலைகள் வெளிர்தல், ஓரங்கள் தீய்ந்த தோற்றம் முதலியவை ஏற்படும். அதனை நிவர்த்த செய்ய 25 கிராம் துத்தநாக சல்பேட், மக்னீசியம் சல்பேட், மாங்கனீஸ் சல்பெட் மற்றும் 12.5 கிராம் காப்பர் சல்பேட் மற்றும் பெர்ரஸ் சல்பேட் ஆகியவற்றை 5 லிட்டர் நிரில் கரைத்து அதனுடன் ஒரு மில்லி ஒட்டும் திரவமாகிய டீப்பால் கலந்து நான்று முறை கீழ்க்கண்ட தருணங்களில் தெளிக்கவேண்டும்.

1. புதிய தளிர்கள் தோன்றும்போது
2. ஒரு மாதம் கழித்து மறுமுறை
3. பூக்கும் தருணம்
4. காய் பிடிக்கும் தருணம்

**அன்னாசி**

ஒரு எக்டருக்கு தொழு உரம் 40 முதல் 50 டன் இடவேண்டும். பின்பு செடி ஒன்றிற்கு யூரியா 16 சிராம், சூப்பர் பாஸ்பேட் 4 கிராம், மியூரேட் ஆப் பொட்டாஷ் 12 கிராம் என்ற அளவில் இரு சமமாகப் பிரித்து கன்று நட்ட ஆறாவது மாதம் ஒரு முறையும் பன்னிரண்டாவது மாதம் ஒரு முறையும் இடவேண்டும்.

அன்னாசியில் இரும்புச்சத்து குறைபாடு, துத்தநாகக் குறைபாடு மற்றும் மயில் துத்தக் குறைபாடுகள் காணப்படுவதுண்டு. இவற்றைப் போக்க இலைவழி ஊட்டாக 0.5 சதவிகிதம் முதல் 1.00 சதவிகிதம் சிங்க்சல்பேட் கரைசல் மற்றும் பெரஸ் சல்பேட் கரைசலை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவேண்டும்.

**சப்போட்டா**

உரம் மற்றும் எரு வினை தண்டுப் பகுதியிலிருந்து 45 செ.மீ தூரத்தில் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் இடவேண்டும்.

| எரு மற்றும் உரங்கள் (கிலோ ஒரு | முதலாம் ஆண்டு | வருடா வருடம் அதிகரிப்பு | 6 வருடங்களுக்குப் பிறகு |
|---|---|---|---|

| மரத்திற்கு) | | | |
|---|---|---|---|
| தொழு உரம் | 10.00 | 10.00 | 50.00 |
| தழை | 0.20 | 0.20 | 1.00 |
| மணி | 0.20 | 0.20 | 1.00 |
| சாம்பல் | 0.30 | 0.30 | 1.50 |

**பப்பாளி**

ஆண்பெண் செடிகளை நீக்கியவுடன் செடி ஒன்றிற்கு 50கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை நடவு செய்த மூன்று மாதங்களுக்கு பின்னர் இரண்டு மாதத்திற்கு ஒர முறை கொடுக்கவேண்டும். மேலும் செடி ஒன்றிற்கு நடவு செய்த ஆறு மாதங்களுக்கு பின்னர் 20 கிராம் அசோஸ்பைரில்லம் அல்லது பாஸ்போபாக்டீரியம் கொடுக்கவேண்டும்.

**மாதுளை**

| **எரு மற்றும் உரங்கள் (ஒரு மரத்திற்கு)** | **முதல் வருடம்** | **2 முதல் 5 வருடம்** | **6 வருடங்களுக்குப் பிறகு** |
|---|---|---|---|
| தொழு உரம் (கிலோ) | 10 | 20 | 30 |
| தழைச் சத்து (கிராம்) | 200 | 400 | 600 |
| மணிச் சத்து (கிராம்) | 100 | 250 | 500 |
| சாம்பல் சத்து (கிராம்) | 400 | 800 | 1200 |

**பலா**

| **எரு மற்றும் உரங்கள் (கிலோ / மரத்திற்கு)** | **முதல் வருடம்** | **வருடா வருடம் அதிகரிப்பு** | **6 வருடங்களுக்குப் பிறகு** |
|---|---|---|---|
| தொழு உரம் | 10.000 | 10.000 | 50.000 |
| தழைச் சத்து | 0.150 | 0.150 | 0.750 |
| மணிச் சத்து | 0.080 | 0.080 | 0.400 |
| சாம்பல் சத்து | 0.100 | 0.100 | 0.500 |

மேற்படி உரங்களை மே, ஜீன் மாதங்களில் ஒரு முறையும், செப்டம்பர்,அக்டோபர் மாதங்களில் ஒரு முறையும் என இரண்டு முறை பிரித்து இடவேண்டும்.

**பெருநெல்லி**

| **எரு மற்றும் உரங்கள் (ஒரு மரத்திற்கு / வருடம்)** | **காய்க்கும் மரத்திற்கு** |
|---|---|
| தொழு உரம் | 10 கிலோ |
| தழைச் சத்து | 200 கிராம் |
| மணிச் சத்து | 500 கிராம் |
| சாம்பல் சத்து | 200 கிராம் |

மரங்களை கவாத்து செய்தவுடன் உரங்களை அளிக்க வேண்டும்.

**ஆப்பிள்**

மரம் ஒன்றிற்கு 25 கிலோ தொழு உரம் 500 கிராம் தழைச்சத்து 1 கிலோ மணிச்சத்து 1 கிலோ சாம்பல் சத்து அளிக்கவேண்டும்.

**சீமை இலந்தை**

| **எரு மற்றும் உரங்கள் (ஒரு மரத்திற்கு / வருடம்)** | **முதலாம் ஆண்டு** | **இரண்டாம் வருடம்** |
|---|---|---|
| தொழு உரம் (கிலோ) | 20 | 50 |
| தழை (கிராம்) | 200 | 500 |
| மணி (கிராம்) | 100 | 200 |
| சாம்பல் (கிராம்) | 200 | 500 |

மேற்படி உரங்களைக் கவாத்து செய்தபின்பு இடவேண்டும். இரண்டு சதவிகிதம் பொட்டாசிய நைட்ரேட்டை மாத இடைவெளியில் ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தெளிக்க வேண்டும்.

**பீச்**

காய்க்கும் மரம் ஒன்றிற்கு 25 கிலோ நன்கு மக்கிய தொழு உரம், 500 கிராம் தழைச்சத்து, ஒரு கிலோ மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துக்களை அளிக்கவேண்டும்.

**பேரீ**

காய்க்கும் மரங்களுக்கு ஆண்டொன்றிற்கு 25 கிலோ தொழு உரம், 500 கிராம் தழைச்சத்து, 1 கிலோ சாம்பல் மற்றும் மணிச்சத்து அளிக்கவேண்டும்.

**பிளம்ஸ்**

காய்க்கும் மரங்களுக்கும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மரம் ஒன்றுக்கு மக்கிய தொழு உரம் 30 கிலோ, 500 கிராம் தழைச்சத்து, ஒரு கிலோ மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துக்களை அளிக்கவேண்டும்.

**பிற பழப்பயிர்கள்**

| பெயர் | எரு மற்றும் உரங்கள் |
|---|---|
| மேற்கு இந்தியன் செர்ரி | ஒரு மரத்திற்கு, தொழுவுரம்: 10 கிலோ, தழைச்சத்து: 200 கிராம், மணிச்சத்து: 50 கிராம், சாம்பல் சத்து: 100 கிராம் |
| சீதாப்பழம் | ஒரு மரத்திற்கு, தொழுவுரம்: 10 கிலோ, வேப்பம் பிண்ணாக்கு: 1 கிலோ, பி.எச்.சி 10 சதவிகிதம்: 100 கிராம் |
| நார்த்தங்காய் | வருடத்திற்கு இரண்டு முறை தொழுவுரம்: 30 கிலோ, தழைச்சத்து: 400 கிராம், |

| | |
|---|---|
| | மணிச்சத்து: 200 கிராம், சாம்பல் சத்து: 300 கிராம் |
| துரியன் | காய்க்கும் மரங்களுக்கு ஒரு எக்டருக்கு தழைச்சத்து: 38.3 கிலோ, மணிச்சத்து: 8.2 கிலோ, சாம்பல் சத்து: 20.9 கிலோ |
| வெண்ணைய் பழம் | தொழுவுரம்: 40-45 கிலோ, யூரியா மற்றும் சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ |
| அத்திப்பழம் | தொழுவுரம்: 36 கிலோ, வேப்பம் பிண்ணாக்கு: 2.25 கிலோ, அம்மோனியம் சல்பேட்: 680 கிராம் |
| கிவி | 20 கிலோ தொழுவுரம் கடைசி உழவின்போது அடிஉரமாக இடவேண்டும். ஒவ்வொரு வருடமும் 0.5 கிலோ தழை. மணி மற்றும் சாம்பல் சத்து இடவேண்டும். ஐந்து வருடங்களுக்கு பிறகு தழைச்சத்து: 850-900 கிராம், மணிச்சத்து: 500-600 கிராம், சாம்பல் சத்த: 800-900 கிராம் |
| ஏப்ரிகாட் | ஒரு மரத்திற்கு, தொழுவுரம்: 40 கிலோ, தழைச்சத்து: 500 கிராம், மணிச்சத்து: 250 கிராம், சாம்பல் சத்து : 200 கிராம் |
| கரிப்பலா | ஒரு மரத்திற்கு தொழுவுரம்: 25 கிலோ, 7:10:5 தழை, மணி, சாம்பல் சத்துக் கலவையினை 1-2 கிலோ இடவேண்டும். |
| லிட்சி | 10 வயதுள்ள மரத்திற்கு தொழுவுரம்: 60 கிலோ, தழைச்சத்து: 100 கிராம், மணிச்சத்து: 40 கிராம், சாம்பல் சத்து: 400 கிராம் / மரம். தழைச்சத்தினை இரு பகுதிகளாக பிப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதத்திலும், தொழுவுரம், மணி மற்றும் |

| | |
|---|---|
| | சாம்பல் சத்தினை டிசம்பர் மாதத்திலும் இடவேண்டும் |
| மங்குஸ்தான் | ஒரு மரத்தற்கு தொழுவுரம்: 75 கிலோ, தழைச்சத்து: 1 கிலோ, மணிச்சத்து: 0.8 கிலோ, சாம்பல் சத்து: 3.0 கிலோ |
| ஸ்ட்ராபெர்ரி | அக்டோபர் மற்றும் பிப்ரவரியில் ஒரு செடிக்கு தொழுவுரம்: 3 கிலோ / சதுரமீட்டர், தழைச்சத்து: 8 கிராம், மணிச்சத்து: 8 கிராம், சாம்பல் சத்து: 8 கிராம் |
| தாட்பூட் பழம் | ஒரு செடிக்கு தொழுவுரம்: 10 கிலோ, தழைச்சத்து: 20 கிராம், மணிச்சத்து: 20 கிராம், சாம்பல் சத்து: 15 கிராம் |
| பிலிம்பி | ஒரு வருடத்திற்கு, தழைச்சத்து: 80 கிராம், மணிச்சத்து: 50 கிராம், சாம்பல் சத்து: 100 கிராம் அளவு ஒரு மரத்திற்கு இடவேண்டும் |
| கேரம்போலா | ஒரு மரத்திற்கு, தழைச்சத்து: 100 கிராம், மணிச்சத்து: 50 கிராம், சாம்பல் சத்து: 100 கிராம் |
| கலாக்காய் | தொழுவுரம்: 10 கிலோ / மரம் |
| லோக்குவட் | ஒரு மரத்திற்கு, தழைச்சத்து: 50 கிராம், மணிச்சத்து: 30 கிராம், சாம்பல் சத்து: 150 கிராம், கால்சியம்: 40 கிராம் |
| நாவல்பழம் | ஒரு மரத்திற்கு, தொழுவுரம்: 20 கிலோ, தழைச்சத்து: 100 கிராம், மணிச்சத்து: 100 கிராம், சாம்பல் சத்து: 100 கிராம் |
| பால்சா | ஒரு மரத்திற்கு, தழைச்சத்து: 50 கிராம், மணிச்சத்து: 20 கிராம், சாம்பல் சத்து: 50 |

| | |
|---|---|
| | கிராம் |
| மல்பெரி | ஒரு செடிக்கு, தொழுவுரம்: 10 கிலோ, தழைச்சத்து: 50 கிராம், மணிச்சத்து: 50 கிராம், சாம்பல் சத்து: 50 கிராம் |